அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை :15/2021

எனது இலக்கம்: EST-3/POLIC/04/0035
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.09.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## 2020 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் உரிமை அனுபவிக்க உரித்துடைய அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல்

கோவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக தாமதமாக நடைபெற்ற 2020 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் உரிமையை அனுபவிப்பதற்கு உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் வகையில் சலுகை வழங்குவதற்கு 2021.07.26 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

"தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2020 பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கையளித்து அத்தேர்தலில் போட்டியிட்டு அரசியல் உரிமைகள் அனுபவிப்பதற்கு உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு, 2020 மார்ச் மாதம் 20 ஆந் திகதி முதல் 2020 மே மாதம் 20 ஆந் திகதி வரையான காலம் சம்பளத்துடனான லீவாகக் கருதி சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்."

02. இவ் ஏற்பாடுகள் 2020 நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலுக்கு மாத்திரம் ஏற்புடையது.

ஒப்பம்./ஜே.ஜே.ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு